
# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை எண்: 20

(பதிவு எண் 135/83)

(உறுப்பினர்களுக்கு மட்டும்)



பதினொன் சித்தர்களின் முறைப்படி அமைக்கப்பட்ட
ஒன்பது கோள்களின் வெட்டவெளிக் கருவறைகள்
(நவக்கிரகம்)

காணிக்கை ரூ 1

26-8-85

## சித்தர் தரும் களஞ்சியம்

(1) பதினெண் சித்தர்கள் அறுவைப் பற்றி பலஇடங்களில் குறிக்கின்றனர் இவர்கள் தெளிவாக எண் கணிதத்தைப் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளனர். எண்ணின் மடங்கையும், அவற்றிற்குறிய தமிழ்ச்சொற்களையும் குறித்துள்ளனர் அதைப்போல, அணுவின் பகுதிகளையும் குறித்துள்ளனர்.

அணு/1000 - சேன்

(2) எழுச்சிதான் ஆசை. காமம் இருந்தால் தான் உயிரோடு இருக்க முடியும் உயிருள்ள வரை காமம் இருக்கத்தான் செய்யும்

(3) பசிக்குச் சாப்பிடாத கஞ்சனும் பயந்து தொண்டனைக் கண்டிக்காத குருவும் ஒன்றே.

(4) தனது கொள்கை: குறிக்கோள், தேவை முதலியவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் துணிவு, பணிவு, கனிவு நிறைந்த தொண்டாகவே செய்பவர்தான் குரு.

ஊறுகாயை பார்த்துகொண்டே சாப்பிடுபவர்போல லோபியாக குரு இருக்கக் கூடாது.

(5) கோழை, மோழை, ஏழை, பாழை என்று தன்னம்பிக்கையற்று அடங்கி யொடுங்கி வாழ்பவர் குருவாக சிறக்க முடியாது.

(6) பாசம்-கெடுதலைத் தரும் குறுகியது வெறியானது பாசத்தால் கேடு விளையும். பாசம்-அன்பு, அன்பு என்பது உயர்ந்தது, வலிந்தது, நன்மை தரவல்லது,

(7) தாரமாக - என்பது கற்பு கெட்ட நெறியல்ல இதுபோக இன்பமல்ல அறிவால் உறவைப்பெறுக்கிக் கொள்ளுதல்.

(8) திருவெம்பாவை-மாணிக்கவாசகரால் எழுதப்பட்டது. மார்கழிநோன்பு - எப்படி நோற்க வேண்டும் என்பது பற்றி தெளிவானக் குறிப்புக்கள் இல்லை இல்லை இல்லை.

அருளாட்சி

### உறுதிமொழிகள்

1. அண்ட பேரண்டங்கள் அனைத்தின் தோற்றமும், முடிவும் இயக்கமும் பண்பும் இயற்க்கையே !

-ஆமாம் ஆமாமென்கிறேன்.
ஆமென்பேன்.

2. அருவ, அருவுருவங்களே பயிரினங்களாகவும் உயிரினங்களாகவும் தோன்றி வளர்ச்சி பெறுகின்றன.

-ஆமாம் ஆமாமென்கிறேன்.
ஆமென்பேன்.

3. இம்மண்ணுலகில் பயிரினங்களும், உயிரினங்களும் முறையான, நிறையான வாழ்வு பெறவே பதினென் சித்தர்கள் இந்துமதத்தைத் தங்களின் தாய்மொழியான தெய்வத் தமிழில் வழங்கினுர்கள்.

-ஆமாம் ஆமாமென்கின்றேன்
ஆமென்பேன்.

4. மணிசர்களாக இருந்தவர்களை மனிதர்களாக்கிய சித்தர் நெறி எனும் இந்து மதமே இம்மண்ணுலகின் முதல் மதம் மூலமதம். தாய்மதம்

-ஆமாம் ஆமாம்மென்கின்றேன்.
ஆமென்பேன்.

5. பதினெண் சித்தர்களின் கருவழிவாரிசுகளும் குருவழிவாரிசுகளுமே நாற்பத்தெட்டுவகை வழிபடுநிலையினராகவும் வழிபடுநிலையக் கருவறை மூலவர்களாகவும் உள்ளனர்.

6. பதினெண் சித்தர்களின் அருட்பயிர் விளைச்சலின் நாற்றங்கால் தமிழகமே :

-ஆமாம் ஆமாமென்கிறேன்.
ஆமென்பேன்.

7. பதினெண் சித்தர்களின் அருட்பயிர் விளைச்சலுக்குரிய தண்ணீர் தமிழ்மொழியே

-ஆமாம் ஆமாமென்கிறேன்.
ஆமான்பேன்,

8. பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகப் பசிகளையும் வேட்கைகளையும் வெறிகளையும் தீர்த்துவைக்க விளைவித்த அருள் பயிர் தமிழர்களே :

-ஆமாம் ஆமாமென்கிறேன்.
அமென்மேன்.

**அன்புள்ள சேவுகன்**

அன்பு சேவுக,

(1) நம் நாட்டில் முதலாளிகள் ஏறத்தாழ நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர்கள் இருக்கிறார்கள். அனைத்து கோயில்களிலும் விழாக்களிலும் கூட்டம் கூட்டமாக கலந்து கொள்ளும் மக்கள் நிறைய இருக்கிறார்கள் எண்ணற்ற மத, நிறுவனங்கள், இயக்கங்கள், மதத் தலைவர்கள், மதக் கலைஞர்கள், மதப் பத்திரிக்கையாளர்கள், மதப் பேச்சாளர்கள், மத எழுத்தாளர்கள்... இருக்கிறார்கள் எங்குபார்த்தாலும் அடிக்கடி மதத்தின் பெயரால், சிறிய பெரிய கூட்டங்களும், விழாக்களும், கதை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும், பிறவும் நிகழ்ந்துகெண்டு -தான் இருக்கின்றன. ஏறத்தாழ பூசைக் கென்று தனியிடம் இல்லாத வீடே இல்லை பூசைப்படம் மாட்டப்படாத கடையே இல்லை. இந்த அளவு நமது நாடு மதவாதி -கள் மிகுந்த நாடாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த நாட்டின் சமுதாய சீர்திருத் -தவாதிகள், அரசியல்வாதிகள், இலக்கிய வாதிகள், தமிழார்வமுடையோர்... எனப் படுபவரெல்லாம் உதட்டளவில் நாத்திகக் கருத்துக்களையே மிகுதியாகப் பேசித்திரி பவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ,தொடர்ந்து கால்நூற்-றாண்டாக, நாத்திகப்போக்கும், நோக்கும் உடையவர்களே நமது அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். என்ன காரணம் ? எது காரணம் ? எப்படிக் காரணம் ? எவ்வளவு காலம் காரணம் ? என்னென்ன முயற்ச்சிகள் காரணம் ?... என்பதையெல்லாம் ஆராய வேண்டும். இம்மாபெரும் சுமை நமக்கு இருப்பதால் தான் நாம் கழுத்துநோக, விழி பிதுங்க, மூச்சுத்திணற மெல்ல நிதானமாக நடை போடுகிறோம். இதனைப் பிறரும், நாமும், புரிந்தும், புரியவைத்தும் செயல்படக்கூடிய சூழ்நிலையை எப்படியாவது உருவாக்கியே ஆகவேண்டும். ஆனால் அது அறிவியல் பூர்வமாக இருக்க வேண்டும்.

(2) நண்ப நமது பத்தர்கள் மதவாதிகள் மதத்தால் வயிறுபிழைக்கும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் முதலியோர் கள் வேண்டா வெறுப்பாக நாற்றம் அடிக்கும் குப்பையை நறுமணமிக்க மலரைத்தரும் செடி கொடிகளுக்கு உரமாக, கையால் அள்ளியள்ளி தூறில் (செடி அடியில்) வைத்துப் பணிபுரியும் ஆட்களைப் போலவே, மதத்தைத் தங்களுடைய வாழ்க்கையின் நன்மைகளுக்காகப் பயன்படுத்திப்கொள்கிறார்கள். அதாவது பெரும்பாலான மதவாதிகள்,உதட்டளவில் மதம் மடமையானது, மூட நம்பிக்கை மிகுந்தது,ஆபாசங்கள் மிகுந்தது,

-தொடரும்

அறிவுக்கு அப்பாற்பட்டது, தவிர்க்க முடி-யாத தீயது என்ற கருத்தை எல்லாம் கூறியபடியே தான் மதத்தை பயன்படுத்தி வாழ்கிறார்கள். இதற்குக்காரணம் மதத்தை-ப்பற்றிய முறையான வரலாறு, நிறைவான தத்துவம், முழுமையான இலக்கியம் பொறுப்பான பயிற்சி, பொறுமையான சிந்தனை, உண்மையான மத உணர்வு நேர்மையான மதச்சிந்தனை, ஒழுங்குப் படுத்தப்பட்ட மதவாழ்க்கை, மதக்கலை களில் பயிற்சி, மத குருமார்களிடம் தொடர்பு, மதத்தைப்பற்றிய அச்சம், கூச்-சம், இச்சை, வேற்று மொழியில் மதத்தை செயல்படுத்துதல், அன்னியர்களை மதத் தலைவர்களாக ஏற்றல்... முதலிய தவறுகள் தான். எனவே இத்தவறுகளை அகற்றிடும் முயற்சி விரிந்தும், விரைந்தும், துவக்கப் பட்டே ஆக வேண்டும்.

(3) நமது மதவாதிகள் கண்மூடிப் பத்தர்களாக, எல்லாம் கடவுள் செயலாக ஏற்கும் மந்தகதி உடையவர்களாக, புதுமை நாட்-டமோ, புரட்சி நம்பிக்கையோ, இல்லாத-வர்களாக, இருக்கிறார்கள். எனவே தான் ஒலிபெருக்கியோ, விளம்பரமோ இல்லாமல் எல்லாக்கோயில்களிலும் நம்மவர்கள் கூடி ஒருவர் இருவர் என்று நின்றுவது நமது வெளியீடுகளைக் உரக்கப் படித்துக் காட்ட வேண்டும். விற்பனைக்காக நமதுவெளியீடுகளைக் கடைவிரிக்கவேண்டும். மக்களின் ஐய வினாக்களுக்கும் பதில் கூறிச் சிறுசிறு சொற்பொழிவுகள் நிகழ்த்துதல் வேண்டும்.

(4) பொழுது போக்கும் கழகங்கள் நடத்-துவது போலவே, பல பணக்காரர்கள், சில சில இலக்கியச் செல்வாக்குடையவர்களும் மதச் சபைகள், மன்றங்கள் வாரவழிபாட்டு அமைப்புகள், சிறுசிறு தொடர் இலக்கிய விழாக்கள்... நடத்தி வருகிறார்கள். இவர்-கள்தான் மதத்தை மயக்கப் பொருளாக, பிற்போக்குச் சத்தியாக புரியாத துறையா-கக் காப்பாற்றுவார்கள். எனவே, இவர்-களிடமிருந்து மதத்தைப் காப்பாற்றிப் பகுத்தறிவுப் போக்கும், சமுதாய நல நோக்கும், விஞ்ஞான சூழலும், உடைய தர்க்கிடல் வேண்டும்.

(5) மதவாதிகள், தங்களுடைய நூல்களும் தலைவர்களும் சமத்துவத்தை ,பொதுவுட-மையை, கூட்டுறவை, வட்டி வாங்காமை சுரண்டாமையை, ஏமாற்றமையை, வேறுபாடு பாராட்டாமையை, பிறரை அடிமைப் படுத்தாமை... என்று எண்ணற்ற உயர்ந்த தத்துவங்களைக் கூறுவதற்காகக் கூறு வார்கள். ஆனால், யாருமே இவற்றைச் செயலாக்கும் ஆர்வத்தையோ, நம்பிக்கை-யையோ, விரும்பி ஏற்றுப் போற்றும் பக்குவத்தையோ பெற்றிருக்கவில்லை. எனவே தான், நமது மதம் ஏட்டுச் சுரக்காயாக கற்பனையாக, பழங்கதையாக, கவைக்கு உத-வாததாக இருக்கிறது. இதனை மாற்றும் ஏட்டு அறிவும், பட்டறிவும், புரட்சியுள்ளமும் உடையமதவாதிகள் ஏறத்தாழத் தோன்-றவே இல்லை என்றுதான் கூறவேண்டும்

(6) நண்ப! மத சம்மந்தமான அனைத்து விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும், நம்மவர்கள் மதரீதியாகவே, சமுதாய, பொருளா-தார, இலக்கிய கலை, அரசியல் சிந்தனைகளை வளர்க்கும் வண்ணம் சொற்பொழிவாற்ற வேண்டும். இதற்கு தேவையான பாடப் புத்தகங்கள், இதுவரை நாம் வெளியிட்டு இருக்கும் அறிக்கைகளும், அறிவிக்கைகளும், புத்தகங்களும், மாதந்தோறும், வெளிவரும், குருதேவர் இதழுமேயாகும்.

(தொடரும் செப் ஏட்டில்)

படித்தவர்களை மீண்டும் படிக்க வைக்கவேண்டும்.

ஆண்டுக்கு இதுபோல் ஓரிரு நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்துகொண்டு சொற்பொழிவு நிகழ்த்தும் பழக்கத்தை உடையவன் நான் எனவே, எனது சொற்பொழிவு நீங்கள் வழக்கமாகக் கேட்டுக்கேட்டுப் பழகிப்போன ஒன்ருக இருக்காது. அது, உங்களில் சிலர் சிலவாருக எண்ணுதற்கு இடம் கொடுக்கலாம். இருப்பினும், நான் எனக்கேயுரிய முறையிலே ஒரு சில சிந்தனைகளை உங்களைச் சிந்திக்க வைப்பதற்காக கூற விழைகின்றேன்.

இது போன்ற நிகழ்ச்சிகளில் சொற்பொழிவு நிகழ்த்துவது சற்று சிக்கலான ஒரு தொல்லை மிகு செயல்தான். ஏனெனில் இங்கு கூட்டத்தில் இளஞ்சிறுவர்கள் இளைஞர்கள், நடுத்தரவயதினர், பெரியவர், .. என்று பல பருவத்தினர் இருப்பதோடு; மாணவர்சமுதாயம்,, ஆசிரியர் சமுதாயம், பொதுமக்கள்... என்று மூன்று பெரும் அறிவியல் பிரிவுகள் இருக்கின்றது இந்த அறிவியல் பிரிவுகள் ஒன்ருேடொன்று பல்வேறு வகைகளிலும், வளர்ச்சிகளிலும், முதிர்ச்சிகளிலும், ஆர்வங்களிலும் மிகுந்த ஏற்ற இறக்கங்களையும், மாறுபாடுகளையுப், வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் உடையவை எனவே, நான் யாருக்காகப் பேசுவது? யார் தெரிந்துகொள்ள? யார் புரிந்து கொள்ள? யார் உணர்ந்த கொள்ள யார் தெளிந்து கொள்ள? யார் ஒப்புக் கொள்ள? யார் ஏற்றுக் கொள்ள? யார் போற்றிப் பாராட்டப் பேசுவது? ... என்ற வினக்கள் விடை காண முடியாத வினக்களாகி என்னை மலேக்கவைத்து மலேயாக்கி இருக்கின்றன.........

நண்பர்களே! எனது கல்லூரிமாணவர்கள் வகுப்பறையில் சித்தரின் பேச்சுகளைக் கேட்டிட்டோமே! பொதுமேடையில் சித்தரின் பேச்சு எப்படியிருக்கிறது என்று கேட்டுத்தான் பார்ப்போமே... என்று திரளாக வந்திருக்கிருர்கள் என்பதால்; அவர்களையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கும் என் பேச்சு விருந்தாக வேண்டுமே என்ற பொறுப்பில் என் நிலேயை மலேயாக! மலேப்புக்கு மலேயாக ஆக்கிக் கொண்டுள்ளேன்.

நான் பங்கு பெறுகின்ற இந்தநிகழ்ச்சி ஒரு கல்விச்சாலேயின் ஆண்டு நிறைவு விழாஎன்பதால் எனது எண்ண ஓட்டத்தை 'கல்வி', 'கல்விச்சாலே'கல்விச்சாலே ஆண்டு, 'கல்விச்சாலே ஆண்டு நிறைவு', 'கல்விச்சாலே ஆண்டு நிறைவு விழா',...... என்பனவற்றை ஒட்டியதாக்கிக்கொள்ள முயலுகின்றேன்.

ஆர்வமிக்க மாணவ நண்பர்களே! இந்தக் கல்விச்சாலே ஆண்டு நிறைவுவிழா ஆண்டு தோறும் நடந்துகொண்டேதான் இருக்கும் மாணவர்களும் ஆண்டுதோறும் நிறைவு வில் பங்கு பெற்று வெளியேறிக்கொண்டே தான் இருப்பார்கள்! எனவே, இந்த விழாவுக்கு நிறைவு ஏற்பாடு விழா முடிவாகப் போவதில்லை! ஆண்டுக்கு நிறைவுஏற்பாடு கல்வியாண்டு தொடராமல் இருக்கபோவதில்லே இந்தக் கல்விச் சாலேக்கு நிறைவு ஏற்பட்டு இனிமேல் பணியாற்றத் தேவையில்லே என்ற முடிவுநிலே ஏற்படபோவதில்லே!......எனவே நிறைவு என்றசொல் இங்கு முழுமையான முற்றுப் பெற்ற பொருளேத்தரவில்லே ...... தரமுடியவில்லே

அதாவது முல்லேயே நீ மலராதே ! நீ மலர்ந்தது போதும் ! மணம் பரப்பியது போதும் ! உன்னேக்கண்டு மகிழ்ந்தது போதும்! சூடி மகிழ்ந்தது போதும்!......

முழுநிலவே ! நீ ஒளிராதே ! நீ ஒளிப்பரப்பியது போதும்! உன்னொளி கண்டும் உண்டும் மகிழ்ந்தது போதும்!

தென்றலே! நீ தவழ்ந்தது போதும்! நீ தவழ்ந்து வந்து குளுமையூட்டி இனிமையளித்தது போதும்! நாங்கள் மகிழ்ந்தது போதும்!......... என்று இயற்க்கையின் நிகழ்ச்சிகளில் நிறைவுகண்டு யாரும் அதற்கு முடிவுகட்டுவது இல்லே.

இதைப்போலத்தான் கல்விச்சாலேயின் பணியிலே நிறைவுகண்டு யாரும் முடிவு கட்டுவது இல்லே. ஆண்டு தோறும் இக்கல்விச்சாலேயில் தங்களின்படிப்பைநிறைவு செய்துகொண்டு வெளியேறும் மாணக்கர்களுக்காக ஆண்டு நிறைவுவிழா நிகழ்ந்தது கொண்டேதானிருக்கும் அப்படித் தொடர்ந்து ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தது வந்திட்டால்தான் மாணவர்கள் கல்வியில் ஆர்வமும் அக்கரையும் வளரப் பெற்றவர்களாக ஆகிடுவார்கள். ஆனுல் ஏட்டுப்படிப்பில் நிறைவு பெற்றவர்கள் ஆண்டு தோறும் கல்விச்சாலேகளிலிருந்து வெளியேறிக்கொண்டே இருந்தும் கூட, நாட்டு நடப்பில் நிறைவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதா என்ற விஞவை எழுப்பி விடைகாண முற்படும் போதுதான்; இந்த நிறைவு விழாக்களில் உண்மையான தன்மைகள் நுண்மையாக விளங்குகின்றன.

''ஏட்டுச் சுரைக்காய் கறிக் குதவாது''
''பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது''

என்ற முதுரைகள் இத்திருநாட்டின் கல்விக்சாலேகளில் கற்றுத் தேர்ந்து ஏட்டுப் படிப்பில் நிறைவு கண்டவர்களால் நாட்டிலுள்ள குறைகளேக் குறைத்து நிறைவுகளே நிறைவு செய்ய முடியாது!......... முடியவில்லே ...... என்ற பேருண்மையினே விளக்குகின்றன. இந்தநிலே இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல ! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இத்திருநாட்டில் கல்வியாலும், கல்விச்சாலேயாலும், கல்விகற்றவர்களாலும் யாதொரு நன்மையும் ஏற்படவே இல்லே ... .. அதை, முதுபெரும் மூதாட்டி ஔவையார்

''கல்லாதாரே நல்லார்'' என்று கூறிச் சென்றுள்ளதால் உணரலாம் இப்படி நான் கூறுவதைக், ''கல்வி கற்பதே தவறு'' என்று நான் கூறுவ்தாக யாரும் தவருக எடுத்துக்கொள்ளக் கூடாது நெடுங்காலமாகவே <u>இத்திருநாட்டில் கல்வித்துறை பொதுமக்களின் நேரடி வாழ்க்கைக்குப் பயன்படாத ஒன்ருகவே இருந்து வந்திருக்கின்றது</u> என்ற மாபெரும் கருத்தைத்தான் பேருண்மையைத்தான் சுட்டிக்ககாட்ட விரும்புகின்றேன் நான்

என தருமை நண்பர்களே! இந்த ஊரில் இந்தக் கல்விச் சாலே தோன்றிப் பல ஆண்டுகளாகியுள்ளன. இந்தக்கல்விச் சாலே இதுவரை பல்லாயிரக் கணக்கான மாணவர்களே உருவாக்கியிருக்கிறது. இதில் எத்தனேமாணவர்கள் ஏட்டிலும் நாட்டிலும் நிலேயான புகழ்த் தேடியுள்ளார்கள்?

செப் ஏட்டில் தொடரும்

ம. பொ. சி. மற்றும்

தினமலர் ஆசிரியருக்கு மறுப்பு.

1. இந்து மதத்தின் உருவ வழிபாடு தான் தமிழில் பல உயர் இலக்கியங்கள் தோன்றக் காரணமாயின.

ம. பொ: சி.

2. '... அதிக விற்பனையுள்ள பத்திரிக்கையால் நாட்டுக்கு நன்மை என்பதல்ல. நல்ல கருத்துக்களைத் தரும் பத்திரிகையால்தான் நலன் கிடைக்கும். பத்திரிக்கைக்குள் குறிக்கோள் தேவை.'

ம. பொ. சி.

3. '... சிற்பிகள் செதுக்கி உருவாக்கும் இலிங்கமும் உண்டு. தானாகவே தோன்றும் சுயம்புலிங்கமும் உண்டு. அதுபோல், இந்துமதம் தானாகவே தோன்றியது. இதனை எந்தக் காலத்தில் யார் தோற்றுவித்தார்கள் என்பது யாருக்குமே தெரியாது.'

ம. பொ. சி:

4. '... எங்கோ கிடந்த கல்லை எடுத்துச் சிற்பி சிலை செய்கிறான்.'

ம. பொ. சி.

5. '... தமிழ்நாட்டில் இந்துமதம் பரவி சிலவாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. சிந்து சமவெளி நாகரீகத்தில் தமிழர்களின் பங்கு இருந்தது என்று மேல்நாட்டு அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.'

தினமலர் ஆசிரியர்

இரா, கிருட்டிணமூர்த்தி

(சென்னையில் 'தர்மச் சுடர்' என்னும் செய்தியிதழின் வெளியீட்டு விழாவில் பாரதி வித்யா பவன்-சென்னை 9-5-85 வெளியீடு தினமலர் 10-5-85 பக்கம் 4 பத்திகள் 6-8)

இயக்கக் செயற்குழு விளக்கம்

முதலிரண்டு கருத்துக்களை வரவேற்று பாராட்டுகின்றோம் மகிழ்கின்றோம்,

இந்துமதம் எவரால், எவ்வளவு காலத்துக்குமுன், எங்கே, ஏன் எப்படியெப்படி, என்னென்ன கலைகளின் மூலம் என்னென்ன தத்துவ சித்தாந்த அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது? என்ற விவரங்களை இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை முழக்க விளக்க ஏடான 'குருதேவர் அறிக்கை' பத்தில் தெளிவாக வெளியிட்டிருக்கின்றோம். நான்காவது கருத்தினையும் கண்டிக்கின்றோம். செதுக்கப்பட வேண்டிய சிலை ஆணா? பெண்ணா? அலியா? பறவையா? விலங்கா? என்ற ஐந்தின் அடிப்படையிலேயே கல் தேர்ந்தெடுக்கப்படும்.

கல் தேர்ந்தெடுக்கும் முறைகள், கல் தோண்ட ஆரம்பிக்கப்படும் கிழமை, நேரம், சிலை செதுக்க ஆரம்பிக்கப்படும் பருவகாலம் (வளர்பிறை, தேய்பிறை) சிலையின் கண் திறக்கும் நேரம், நாள், ... முதலிய பல சட்டங்கள், விதிகள்...... சிலை செதுக்குவதற்கு உண்டு.

ஐந்தாவது கருத்தை வன்மையாக எதிர்க்கின்றோம்.

செப். ஏட்டில் தொடரும்

குருபாரம்பரியம் கூறும்

யக்ஞவல்லியர் வரலாறு

இந்தச் சூரியனார் இமயமலைச் சரலிலே நெடுங்காலமாக கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தார்: அருளாளர்களிடம் மாணாக்கனாக இருந்து ஏட்டறிவிலும் பட்டறிவிலும் தேர்ச்சி பெற்றார்,

இவர் சிறப்பாக இருடிவேதத்தை 'பசுக்கோவலன்' (பாஸ்கலரிஷி) என்பவனிடமும், அதர்வாண வேதத்தை அண்ட பேரண்ட அருளாளர் (அருணரிஷி) என்பவரிடமும், சாம வேதத்தை அஞ்ஞானச் சாவுமணி (ஜெமினி ரிஷி) என்பவரிடமும், அசுர வேதத்தை தனது தாய் மாமனை, 'வைகை சிம்போகி' (சமசுக்கிருதத்தில் வைசம்பாயனர்) என்பவரிடத்திலும் கற்றுக் கொண்டார். ஆனால், இவரது தாய்மாமன் போகப் பிரியனாக இருந்ததால் அசுர வேதத்தை முழுமையாக இவருக்குக் கற்றுத்தர முடியவில்லை. இதனை சூரியனார் தனது அசுர வேதப் பயிற்சியால் கண்டறிந்தார். இது குறித்து இவரது மாமன் 'வைகைச் சம்போகியிடம் அடிக்கடிப் போராட வேண்டியிருந்தது.

இப்போராட்டம் வைகைச் சம்போகியின் நெருங்கிய நண்பனும் போக விருப்னுமான, 'மோக விருப்பன்' தொடர்ந்து முறையற்ற போகத்தாலும், மோகத்தாலும், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு வருந்திக் கொண்டிருந்தவனுக்கு மருத்துவம் பார்ப்பதில் விளைந்த கருத்து மாறுபாட்டில் மாபெரும் முறிவையும், முடிவையும் உருவாக்கிற்று. 'அதாவது, சூரியனார் தன்னுடைய மாமாவான வைகைச் சம்போகியைவிட அசுர வேதத்தில் வல்லவனாக இருந்ததால் அவருடைய நண்பன் மோக விருப்பனின் தொழுநோயை நலப்படுத்துமாறு கட்டளையிடப்பட்டு அதில் விளைந்த தகராறால் குருவையே மறுத்தும் வெறுத்தும், எதிர்த்தும் முறைப்படி செயல்பட்டு அவரிடம் கற்ற அசுர வேதச் சாரங்களை (பயன்களை, சத்திகளை, சித்திகளை, முத்திகளை) வாயில் போட்ட வாழைப்பழத் துண்டில் ஏற்றி அவரது காலடியில் துப்பி திரும்பக் காணிக்கையாக்கிவிட்டு வெளியேறிவிட்டார்.

விளக்கம்

பதினெண் சித்தர்கள் நெறிப்படி யாருக்கு குருவைப் பிடிக்கவில்லையோ அவர்கள் குருவிடம் கற்றவைகளையும், நோற்றவைகளையும், உற்றவைகளையும், பெற்றவைகளையும் ஒரு வாழைப்பழத் துண்டில் மந்தரித்து ஏற்றி அதனை வாயில் போட்டு மென்று அதனை குருவின் காலடியில் துப்பித் திப்ருபித் தந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் அவன் குரு விரோதியாகவோ துரோகியாகவோ பழிபாவங்களுக்கும் சாபங்களுக்கும் உரியவனாகமாட்டான்.

சூரியனார் வரலாற்றில் அவருடைய மாமனை வைகைச் சம்போகியார் அதிகமாகக் காணிக்கைக் கொடுத்தாலும்

செப். ஏட்டில் தொடரும்

<u>சித்தர் தரும் வரலாற்றுச் சிந்தனை</u>

(முற்றிலும் ஆய்வுக்குரியது)

கண்டப்பக் கோட்டை சித்தர் ஏனம் பட்டிபார் உ: இராமசாமிப்பிள்ளை எனும் கருவூரர் தமது கடைசி காலத்தில் எழுதிய குறிப்புக்களிலிருந்து ,

. . ., பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி மூவேந்தர் ஆட்சியைக் காக்க அருட்படை திரட்டத் திட்டம் தீட்டியும் செயலாக்காததால் தமிழ்மொழி காத்த பாண்டியப் பேரரசு முதலில் தமிழினப் பகைவர்களால் அழிக்கப்பட்டது. இம் மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியின் ஒரு பகுதிதான் <u>சிலப்பதிகாரக் காப்பியத்தில்</u> விளக்கப்படுகின்றது.

அதாவது, '<u>இமயமலைச் சாரலில் இருந்த பிராகிருத மொழி பேசும் களப்</u> பிறர்தரைவழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத் திருந்தபோது; <u>கங்கை கடலோடு கலக்கு மிடத்து இருந்த பாலிமொழி பேசும் கலப் பிறர்</u>' கடல் வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்தனர், அப்போது எதிர்பாராத விதமாகப் பூம்புகார்ப் பெருவணிகறிருவ றில் ஒருவர் மகனும், மற்றொருவரின் மருமகனுமான கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியால் <u>கண்ணகியின்</u> பத்தினித் திறத் தெய்வீக ஆற்றலும்; வணிகப் பெருங்குடியினரின் சீற்றமும், மதுரை மாநகரைப் புயலிலகப்பட்ட வாழைத் தோட்டமாக்கிற்று. அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் சிறைப்படுத் தித் கொணர்ந்த ஆயிரக்கணக்கான ஆரியர்கள் சூழ்ச்சி செய்து களப்பிறர் களைக் கடல் வழியாகவும்; தரை வழியாக வும் பண்டியப் பேரரசைச் சூறையாடச் செய்தனர்.

தமிழினம் பேணும் தமிழ் மொழியை வளர்க்கவும். காக்கவும் முற்படும் மதுரை மாநகர் மீண்டும் தமிழ்மொழி வளர்க் கவோ, காக்கவோ முற்பட முடியாத அளவு தமிழுணர்வும், பற்றும், பாசமும், ஆற்றலும் ஆர்வமும் . . . முழுமையாக அழிக்கப்பட்டன. தமிழ்ப் புலவர்கள் வெட்டெறியப்பட்டார்கள்; தமிழ்ச் சுவடி களுக்குப் படியெடுப்போர் மாறுகால் மாறுகை வாங்கப்பட்டார்கள், தமிழ்ச் சுவடிகள் எரிக்கப்பட்டன; தமிழ்ச் சங்க மாளிகைகள், தமிழ்ச் சுவடிக் கோட்டங் கள், பட்டிமன்றக் கூடங்கள் தமிழாசிரியர் கோயில்கள் (சமாதுகள்), தமிழ்ப் பள்ளி கள், தமிழ்க் குருகுலங்கள், கூத்து மண்ட பங்கள், பாணர் இருக்கைகள், வறலிச் சாலைகள், தமிழ்வாணர் முற்றங்கள், தமிழ் மாணுக்கர் கூற்றங்கள் . . . . என்பன எல்லாம் இடிக்கப்பட்டுக் கழுதையேர் பூட்டி உழப்பட்டன.

இப்படித் தமிழினப் பகைவர்கள் தமிழ் மொழியை வடிவும், வாழ்வும், வளமும், வலிவும், வரலாறும் . . . இல்லாமல் அழித் தொழித்தே தமிழர்களைக் கோழைகளாக வும், அடிமைகளாகவும் ஆக்கினர்., தமிழர் களுக்குத் தாய்மொழிப் பற்றோ! பாசமோ!

செப். எட்டில் தொடரும்.

பிடிப்போ பெருமையோ! ஈடுபாடோ; உரிமையோ! இல்லாமல் செய்தால்தான் தமிழர்களை என்னென்றும் அடிமைகளாக வும், கோழைகளாகவும், போலிகளாகவும் கூலிகளாகவும் வைத்திருக்க முடியுமென் பதை உணர்ந்த ஆரியர்கள் சமசுக்கிருத மொழியை தமிழர்கள் உயர்ந்ததாக, பெரியதாக, அறியதாக, கடவுட்டன்மை உடையதாக எல்லாவிதப் பூசைகளுக் கும் உரியதாக ஏற்கும்படி செய்தனர். அதாவது, தமிழை உரிமையிழக்கும்படி செய்வதும்; தாழ்த்துவதும், பழிப்பதும் புறக்கணிப்பதும், வளராமல் தடுப்பதும், வலிமையடையாமல் செய்வதும்தான் தமிழர்களைக் கோழைகளாக, கூலிகளாக காலிகளாக . . . செய்திடும்.

சேர நாட்டையோ, சோழ நாட்டை யோ, அடிமைப் படுத்துவதைவிடப் பாண்டிய நாட்டை ஆரிய மொழியாலும், ஆரியக் சூத்ராலும், ஆரிய மதத்தாலும், ஆரிய அழகாலும் . . , என்றென்றும் அடிமைப்படுததி வேறுபடுத்தி, கூறுபடுத திச் சிதைப்பதிலேயே வடஆரியர்கள் கண்ணுங்கருத்து மாயிருந்தனர், . : என்ற குரும்பாரம்பரிய வாசகம் கண்டு தான் தமிழ் வளர்ச்சிக்காக இலக்கண இலக்கியங்களைப் படியெடுக்கும் பணி யும்; தமிழின் கடவுட்டன்மையும் பிற பெருமைகளும் உணரப்படுவதற்காக அருட்பணி வித்வாக்கத் திட்டமும் தமிழின் விடுதலைக்காகவும், தமிழ்நாட்டுத் தன்னாட் சிக்காகவும் இந்து மறுமலர்ச்சி இயக்கமும் மதத்தால் தமிழர்கள் ஒற்றுமைப்படுத்தி இனப் பற்றும் மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் பெற்றிடச்செய்ய முடியும் என்ப தற்காகக் கடவுளை வழிபடுவோர் கழகமும் உருவாக்கினோம். ஆனால், ஆரியச் சூழ்ச் சிகள் வென்று தமிழர்களே தமிழ்மொழிப் பகைவர்களாகவும், தமிழினத் துரோகி களாகவும், தமிழ்நாட்டு விரோதிகளாக வும் . , . பெருவாரியாகச் செயல்பட்டிட்ட தால் தவத்திலும், தமிழ் வளர்ப்பதிலும் மீனாட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பிப் பதிலும், எம்மாலான பணியைச் செய்து ஒதுங்கி ஒளிவில் ஒடுக்கம் பெறுகின்றோம்,

கண்டப்பக் கோட்டைச் செம்பருத் திப் பிள்ளையும் 2. மிளகாய்ச் சாமி பிள்ளையும் 3. முத்தக் கூற்றத்து அம்பலமும 4 கம்பண்ண உடையாரும் 5. நாச்சியப்பக் கவுண்டரும் 6. சொக்கேச முதலியாரும் 7. அரியநாத முதலியாரும 8, தெய்வமலை நாயக்கரும் 9. இராமேசு வரம் கொண்டருளிய சேதுபதியும் 10 இராயநாதபுரத்துத் தேவரும் "அழகர் மலைக் கோனும் 12. திருச்சி முதலி யாரும் . . , குறிப்பிடும்படியான பணிக் களைத் துணையாக எமக்குச் செய்தார்கள். இருந்தாலும், எம்மிடம் உருவானவர் களில் மந்திரவாதிகளும் சூன்யக்காரர் அரைக்குறைச் சோதிடர்களும் வெதும்பிப் பழுத்த பூசாரிகளும், முழுமைப்பெறாத சிற்பிகளுக்கும். . .அலிகளும் அதிகம் . . . அதிகம் பணமும் தோற்றே தமிழினம் காக்கவியலாமல் ஒடுங்கி நிறைகிறோம்.

செப். ஏட்டில் தொடரும்

வணக்கவுரை

(தலைமைப் பொறுப்பாளர்)

நாம் சிலராகத்தான் உள்ளோம். ஆனால் சிறந்தவர்களாகத் தயாராகி வருகின்றோம். நம்மை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தி, நமது கொள்கைகள் இலட்சியங்கள், சிந்தனைகள், பகுத்தறிவுப் போக்குகள், ஆராய்ச்சி உணர்வுகள், அருட் கொடைகள்,

பயன்படும் வண்ணம் யாரும் செய்ய முன் வரவில்லை. ஏன் நம்மை இருட்டடிப்புச் செய்யவும் மறைக்கவும் முயலுகின்றார்கள்? என்பதை சற்று சிந்திக்க வேண்டும்.

தோல்வியால், ஏமாற்றததால்; வேதனையா? யாரையும் நிந்திக்கவில்லை: ஆதரிப்பார் யாருமின்றி இயற்கையெனும் வளமான காட்டிடைப் புலிகளாக உருவாகி வருகின்றோம். எனவே தான் நாம் பிறரைப்போல அஞ்சவோ. மயங்கவோ இல்லை; நாம் யாரிடமும் கையேந்தியோ, கெஞ்சியோ இருக்கவில்லை,

மதம், இலக்கியம், செய்தியேடு, கலையுலகம், தொழில் ஆட்சியல், மருத்துவம் என்று ஒவ்வொரு துறையும் வளமான வசதியான சுரண்டிவாழும் ஒரு சில கூட்டத்தாரின் ஆளுகைக்கு உட்பட்டே இயங்குகின்றன. ஒவ்வொரு பிரிவினரும் அந்தந்தத் துறைகளில் புதுமையோ, புரட்சியோ, மறுமலர்ச்சியோ, புத்தொளியோ வந்து விடாமல் அரணாக இருந்து வருகின்றனர். அந்தந்த துறைகளின் மூலம் எவ்வளவு தூரம் அறியாமைகளை, மூடநம்பிக்கைகளை. இல்லாமைகளை, இயலாமைகளை உருவாக்க முடியுமோ அவ்வாறெல்லாம் உருவாக்கி வருகின்றனர்.

எங்கெல்லாம் விஞ்ஞானிகள், அறிவாளிகள், சிந்தனை வாதிகள், பகுத்தறிவு வாதிகள் தோன்றுகின்றனரோ அங்கெல்லாம் மது, மாது, பணம். வாழ்க்கை வசதி, போகசுகம், ஆடம்பரம் சிந்தனை, மிரட்டல் ,,, எனும் வலையை விசிட இவ்வல்லரலர்கள் என்றுமே எப்பொழுதுமே தயங்கியதில்லை,

வணிகமனம் எனனும் இலாபச் சிந்தனையுள்ள போக்கு அனைவரிடமும் அனைத்துத் துறையிடமும் வேருன்றி வளர்ந்துவிட்டன. இதனால்தான் நாம் விரைந்து வளர இயலவில்லை. நாம் இத்தனை பேருக்கும் இவர்களின் அடித்தளங்களுக்கும் வெடிவைக்கும் வேலையத்தான் மிக மிக பொதுவாகச் செய்து வருகின்றோம்.

நாம் மதத்துறையை எதிர்க்கவில்லை மதத்துறைத் தலைவர்களின் போக்கினைக் கண்டித்துத் திருத்துகின்றோம். எனவே ஆதரவில்லை, இலக்கியத்தை எதிர்க்கவில்லை. இலக்கிய வாதிகளின் முதலாளித்துவம் மனப்போக்கை, கூலி மனப் போக்கை எதிர்க்கின்றோம். எனவே நமக்கு ஆதரவில்லை. அரசியலையோ,

செப். ஏட்டில் தொடரும்

ஆட்சியிலேயோ குறை சொல்லவில்லை ஆட்சியாளர்களின் பொறுப்பற்றப் போக்கைக் கண்டிக்கின்றோம். எனவே ஆதரவு இல்லை கலைத்துறையின் வேசித்தனத்தைக் கண்டிக்கிறோம். தொழில் துறையாளர்களின் சுரண்டலை சாடுகின்றோம். அப்பாவித் தொழிலாளர்களை ஏமாற்றி ஏய்த்துப் பிழைக்கும் அனைத்து தொழிற் சங்க வாதிகளையும் அலசுகின்றோம், சென்ற நூற்றாண்டில் வடித்த சிந்தனையே என்றைக்கும் உரியது என்று நினைக்கும் மூட நம்பிக்கையே, தந்தை பெரியாரின் சிந்தனைகள் தான் முடிவானவை என்று மொழிந்து தொடர்ந்து அவரின் பெயரால் இருளை வளர்க்கும் கூட்டத்தை எதிர்க்கின்றோம், எனவே தான் ஆதரவில்லை.

இனியாவது நாம் பொறுப்புணர்ந்து செயல்படுவோம்.

வாரீர்! வாரீர்! வாரீர்!

சி கவிக்குமார்

7ம் பக்கத் தொடர்ச்சி

ஐந்தாவது கருத்தை வன்மையாக எதிர்க்கின்றோம்.

இக்கருத்து தமிழினத்தை, தமிழ்மொழியை, தமிழ் நாட்டை' தமிழர்க்காக தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் தமிழர்களான பதினெண் சித்தர்கள் தோற்றுவித்த ' இந்துமதத்தை 'கேலியும், கிண்டலும், நையாண்டியும் செய்வது போல் உள்ளது

ஆசிரியர் கருத்துப்படி, சிலவாயிரம் ஆண்டுகளாகத் தான் இந்துமதம் தமிழகத்தில் இருக்கின்றது என்றால் ..... இந்தச் சிலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் எந்தமதம் இருந்தது? அந்த மதத்தைத் தோற்றுவித்தது யார்? அதன் தத்துவமும் செயல் சித்தாந்தமும் என்ன? அறிய விரும்புகின்றோம்.

இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர்களின் விந்துவழி வாரிசு, அனைத்து வித ஏட்டறிவோடும் பட்டறிவோடும் குருகுலப் பயிற்சிகளோடும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞால குரு சித்தர் கருவூரர் அவர்கள் ஞானச்சாரியாக வாழ்கின்ற இந்தக் காலத்திலேயே இந்துமதம் பற்றி தவறானக் கருத்துக்களை தான் தோன்றித்தனமாக, யாரும் கூற வேண்டாம் என எச்சரிக்கின்றது. கிறித்தவம் இசுலாம் மதங்கள் பற்றி யாருக்காவது இது போல் கூறத் துணிவு உண்டா?

இதுவரை இந்துமதத்தைக் காக்க எவரும் இல்லை. இப்பொழுது இந்துமதத் தந்தையின் கீழ் அனைத்துலக அறிவோடு இளைஞர்கள் புறப்பட்டுள்ளனர். -அறிவுறுத்த விழைகின்றோம்.

